அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 308/2018

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி. உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 13-ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| வா.சா.1 | 13.11.2025 |
| பெயர் மகேந்திரன் | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>குறுக்கு விசாரணை</u>:-

1. வழக்கு சொத்தில் நான் போட்ட வேலி மற்றும் கற்களை பிரதிவாதி உடைத்துவிடுவதால் அவர் வழக்கு சொத்து சம்மந்தமாக இடையூர் செய்யக்கூடாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் விஸ்திரனம் சுமார் 4000 சதுரஅடி மற்றும் அதனுடன் சேர்ந்து ரோடு ஆகும். என்னுடன் உடன் பிறந்த சகோதரர்கள் இருவர் ஆவார். ஜலேந்திரன் மற்றும் கான்டீபன். ஜலேந்திரன் என்பவர் ராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டார். கான்டீபன் வழக்கறிஞர் ஆக உள்ளார். எனது தந்தை ராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டார். எனது தந்தை 1964 வருடத்தில் சொத்தை கிரையம் பெற்றார். அந்த கிரையத்தின் தாய்பத்திரத்தை நீதிமன்றத்தில்தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாய்

பத்திரம் எதுவும் இல்லை. எனது தந்தை கிரையம் பெற்றபோது அனுபவ பாத்தியத்தில் இருந்தவரிடம் கிரையம் பெற்றார்.

2. நான் கூறும் அனுபவபாத்தியம் பொன்னியம்மன் கோவில் அனுபவபாத்தியத்தில் இருந்தது என்றால் சரியல்ல. எனது சொத்திற்கு வடகிழக்கு பக்கத்தில் பிரதிவாதி சொத்து உள்ளது. எனது சொத்திற்கும் பிரதிவாதி சொத்திற்கும் போகவர ஒரேவழி தான் உள்ளது என்றால் சரியல்ல. சுமார் 20 வருடங்களாக அந்த பகுதியில் ஒரேவழி தான் பயன்படுத்தி வரப்படுகிறது என்றாலும் அதன் மூலமாக தான் நானும் பிரதிவாதியும் சென்று வருகிறோம் என்றால் சரியல்ல. நான் வேலிபோடுவதற்கு முன்பு சர்வேயர் வந்து அளந்து பார்த்தாரா என்றால் ஆமாம். அந்த சர்வேயர் அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து கிராமநத்தம் நிலமாகும். பிரதிவாதியின் அப்பாவின் சொத்து தாவா சொத்திற்கு கிழக்கு பக்கத்தில் உள்ளது என்றால் சரியல்ல. வடகிழக்கு பக்கத்தில் உள்ளது.

3. பிரதிவாதியின் தந்தை இடத்திற்கு சென்று வருவதற்கு வழி உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. இதே நீதிமன்றத்தில் வாதியின் தந்தை பிரதிவாதியின் தந்தையின் மீது வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியும். அந்த வழக்கும் இதே பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான் எனது தந்தைக்கு உடல்நிலை சரியில்லாததால் நீதிமன்றத்தில் ஆஜராக முடியவில்லை. அந்த வழக்கு எனது தந்தைக்கு சாதகமாக இல்லை என்ற காரணத்தினால் தான் அந்த வழக்கை நாங்கள் தொடரவில்லை என்றால் சரியல்ல.

4. எனது அண்ணன் வழக்கறிஞர் என்பதால் வழக்கு தாக்கல் செய்வது

பெரியவிஷயம் இல்லை என்றால் சரியல்ல. எனது தந்தை ராணுவத்தில் இருந்து வந்தபிறகு எனது சகோதரர்கள் அனைவருக்கும் 34 1/2 சென்ட் நிலத்தை 2013 வருடத்தில் பிரித்துகொடுத்தார். ஆனால் வழக்கு 2009 வருடத்தில் எனது தந்தையால் தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் ராணுவத்தில் இருந்து வந்ததால் யாராவது அவரது நிலத்திற்குள் உள்ளே வந்தால் அவர்களை சுட்டுவிடுவதாக சொல்லி மிரட்டுவது எனது தந்தையின் வழக்கம் என்றால் சரியல்ல. ஆகஸ்ட் 2018 வருடத்தில் பிரதிவாதி அத்துமீறி தாவா சொத்திற்குள் நுழைந்து வேலியை உடைத்தார்.

5. இது சம்மந்தமாக நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து இருவரையும் அழைத்து விசாரித்தார்கள். சிவில் பிரச்சனை என்பதால் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ள சொன்னார்கள். அசல் வழக்கு எண் 355/2009 வழக்கிலும் முகாந்திரத்தில் காவல்நிலையம் சென்று சிவில்பிரச்சனை காரணமாக நீதிமன்றத்திற்கு சென்று தீர்வு பார்த்துக்கொள்ளவேண்டும் என்று தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. எனது அப்பா சொத்தில் சுற்றி உள்ள அனைத்து சொத்தின் உரிமையாளர்களையும் எங்கள் சொத்திற்குள் வரக்கூடாது என்று அச்சுரித்தி காவல்நிலையத்தில் பிரச்சனையை கொண்டு செல்வது தான் எங்கள் வழக்கம் என்றால் எங்கள் சொத்திற்குள் யாரும் வருவதை நாங்கள் தான் தடுத்தாகவேண்டும். நாங்கள் யாரையும் அச்சுருத்தவில்லை.

(பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)